[4th November 1958

SRI A. VEDARATHNAM : நம்முடைய அரசாங்கத்தின் காகிதத் தேவை எவ்வளவு ? அதில் எத்தனை சத விகிதம் இப்பொழுது கையினால் செய்த காகிதம் உபயோகிக்கப்படுத்தப்படுகிறது ? கையினால் செய்த காகிகதத்தை அதிகமாக உபயோகப்படுவதற்கு அரசாங்கம் மேலும் என்ன என்ன முயற்சி எடுத்துக்கொள்ளும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்தின் காகிதத் தேவையைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. ஆனால், இந்த கையினால் செய்யப்படும் காகித உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : May I know how does the cost of it work out as compared to the machine-made paper?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

Manufacture of fancy articles from sea-shells

*833 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் கடலிலிருந்து எடுக்கும் சங்குகளை கொண்டு, வளையல், பொம்மை முதலியவைகளை செய்யும் தொழிற்சாலை ஒன்று நம் ராஜ்ஜியத்தில் ஏற்படுத்தும், உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

(ஆ) ஆம் என்றால், அது எப்போது, எங்கே ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No, Sir. But there is a proposal to set up two training centres for the manufacture of fancy articles from sea shells, one at Madras during 1958–59 and the other in the Kanyakumari district during 1959–60 or 1960–61.

SRI V. K. KOTHANDARAMAN : நமது ராஜ்யத்திலிருந்து சங்குகளை வாங்கிக்கொண்டு சென்று கல்கத்தாவிலே வளையல், மோதிரம், பொம்மைகள், இன்னும் பலவிதமான பொருள்களை உற்பத்தி செய்து மீண்டும் இங்கே கொண்டுவந்து ஒன்றுக்குப் பத்தாக அவை விற்கப்படுகின்றன. ஆகவே, இதே ராஜ்யத்தில் அவைகளைச் செய்வதற்கென தூத்துக்குடியில் ஒரு தொழிற்சாலையை வெகு சீக்கிரத்தில் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இங்கே தொழிற்சாலை வைத்து பயிற்சி கொடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று நான் சொன்னேன். ஆனால், வங்காளத்திற்கு இந்தச் சங்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அங்கே சில தொழில்கள் நடக்கின்றன. வளையல்கள் செய்வதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வளையல்கள் இங்கே வருவது இல்லை. அந்த வளையல்களை வங்காளப் பெண்மணிகள் சுமங்கலிக்கு அடையாளமாகப் போட்டுக்கொள்கிறார்கள். இந்த சங்கு அங்கு நல்ல விலையாகிறது. இருந்தாலும் தனிப்பட்டவர்கள் முயற்சியினால்கூட இங்கே தொழிற்சாலை கீழக்கரையிலும் மற்ற இடங்களிலும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

SRI A. SAMUEL NADAR : தொழிலாளிகள் கடலிலிருந்து எடுத்துவரும் சங்குகளை ஊதந்து எடுப்பதில் குறைவான அளவுள்ள சங்குகளை சர்க்கார் என்ன செய்கின்றது என்று கேட்கிறேன் ?

4th November 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தனியாக கேள்வி மீன் இலாகாவை பரிபாலனம் செய்யும் அமைச்சர் அவர்களுக்குப் போட்டால் அவர் பதில் சொல்வார்கள்.

SRI T. S. RAMASWAMY PILLAI : தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தனியார் துறையில் ஆரம்பிக்கப்படுமா, அல்லது அரசாங்கமே ஆரம்பிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் ட்ரெயினிங் ஸெண்டர்கள் அமைக்கப் போகிறது என்று சொன்னேன்.

SRI V. SUBBIAH : சிப்பியிலிருந்து சுண்ணாம்பு உற்பத்தி செய்கின்றார்கள். இந்த உயர்தரமான சுண்ணாம்பை உற்பத்தி செய்கின்ற வர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கின்றார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

Construction of a bridge across river at Gudiyattam

* 834 *Q*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லா, குடியாத்தம் ஆற்றில் பாலம் கட்டிய போது அதற்காகக் கைப்பற்றப்பட்ட வீடுகள், காலி மனைகளுக்கு பணம் கொடுத்தாகிவிட்டதா ?

(ஆ) இல்லை என்றால், ஏன் ?

(இ) எப்போது கொடுக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) As the bridge was executed in municipal area many buildings and lands were involved in the alignment of approach roads on either side of the bridge and so, many enquiries had to be made. This accounts for the delay in finalisation of land acquisition proposals by the Revenue Department.

(*c*) Soon after passing of the award.

SRI V. K. KOTHANDARAMAN : பாலத்தைக் கட்டுவதற்கு எடுக்கப்பட்ட வீடுகளையும், காலி மனைகளையும் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகை நான்கு வருஷங்கள் ஆகியும் கூட இதுவரையில் கொடுக் கப்படவில்லை என்று சொன்னால், அதனால் ஏழைகள் வீடு கட்டிக்கொள் வதற்குப் பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் வேறு தொழில் செய்து பிழைப்பதற்கும் வழியில்லாமல் ரொம்பவும் கஷ்டப்படுகிற காரணத்தால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையை வெகு விரைவிலே......

THE HON. SRI P. KAKKAN : விரைவிலே கொடுப்பதற்கு கலெக்டரை சர்க்கார் துரிதப்படுத்திக்கொண்டிருக்கிறது. கலெக்டர் அவர்கள் வெகு சீக்கிரம் கொடுக்க ஏற்பாடு செய்து விடுவார்கள். இருந்தாலும், நோடிபிகேஷன் செய்வதற்கு அதிக நாள் ஆவதோடு ட்ராப்ட் நோடிபிக் கேஷன் செய்வதற்கும் அதிக நாள் ஆகிவிட்டது. இந்த விஷயத்தில் " டிலே " இருக்கிறது என்பதைத் தெரிந்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : நான்கு வருஷங்களுக்கு மேல் ஆகிறது. பாலம் கூட கட்டி பூர்த்தியாகிவிட்டது. இன்னும் கால தாமதம் ஆவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதோடு கூட, உடனடியாக அவர்களுக்கு அந்த உத்தேச நஷ்ட ஈட்டுத் தொகையில் ஒரு பகுதியை யாவது பட்டுவாடா செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?